பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**20 10 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** ராமபிரானின் போதனைகள் தற்காலத்திற்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** இந்தியா - அமெரிக்கா இடையே வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அமெரிக்க அமைச்சர் திரு **Marco Rubio**-வுடன், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று பேச்சு நடத்தியுள்ளார்.

**3.** ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உடனான பொருளாதார ஒத்துழைப்பு உலகளாவிய நெருக்கடிகளையும் கடந்து புதிய உச்சத்தை எட்டியிருப்பதாக இந்தியா கூறியுள்ளது.

**4.** சவுதி அரேபியாவுக்கு கூடுதல் வான் பாதுகாப்பு வழங்கப்படும் என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.

**5.** பிரெஞ்ச் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

ராமபிரானின் போதனைகள் தற்காலத்திற்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தில்லியில் இன்று தசரா பண்டிகையையொட்டி நடைபெற்ற ராவண வதம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், நாடு முழுவதும் தசரா விழாவில் மக்கள் உற்சாக கொண்டாடுவது மகிழ்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டார்.

நாட்டின் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் எடுத்துரைக்கும் முக்கிய பண்டிகையாக  தசரா திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

தீமைகளை அழித்து நன்மை வெற்றிபெறுவதை குறிக்கும் வகையில் தசரா பண்டிகை கொண்டாடப்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

<<<<<>>>>>>

அமெரிக்காவின் தொழில் மற்றும் வர்த்தகத்தில் இந்தியா நெருங்கிய ஒத்துழைப்பை அளித்து வருவதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு **Marco Rubio** தெரிவித்துள்ளார்.

மும்பை வந்துள்ள திரு மார்கோ ரூபியோ, விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், குவாட் அமைப்பின் முக்கிய நாடாக இந்தியா திகழ்வதாக கூறினார்.

மிகப்பெரிய ஜனநாயக நாடாக விளங்கும் இந்தியா, உலக நாடுகளின் அபிமானத்தை பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

பெரிய அளவில் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

எரிசக்தியை கையாள்வதில் இந்தியா சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு தேவையான எரிசக்தியை அமெரிக்கா வழங்க தயாராக உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் பன்முக எரிசக்தி திட்டங்களில் பங்கேற்க அமெரிக்கா மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திரு மார்கோ ரூபியோ கூறினார்.

<<<<<>>>>>>

இந்தியா — அமெரிக்கா இடையே வர்த்தகம், எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது

குறித்து அமெரிக்க அமைச்சர் திரு **Marco Rubio**-வுடன், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பேச்சு நடத்தியுள்ளார்.

மும்பை வந்துள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு **Marco Rubio**-வை சந்தித்தது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள டாக்டர் ஜெய்சங்கர், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசித்ததாக தெரிவித்துள்ளார்.

மண்டல அளவிலான அரசியல், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்தும் அமெரிக்க அமைச்சருடன் தாம் விவாதித்ததாக, டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஆம் ஆத்மி அரசு போதைப்பொருள் கடத்தல்காரர்களை பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

லூதியானாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் உள்ள பல மாவட்டங்களில் போதை கடத்தல் கும்பல்கள் செயல்பட்டு வருவதாக கூறினார்.

முதலமைச்சர் திரு பகவந்த் மான், மக்களுக்கு உரிய பாதுகாப்பை அளிக்க தவறிவிட்டதாகவும், கடத்தல்காரர்கள் மீதான இரண்டு வழக்குகளை சரியாக கையாளவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்த வழக்குகளை சிபிஐ-யிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, திரு அமித் ஷா, பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்துப் பேசினார்.

மான்சா, குர்தாஸ்பூர், சங்ரூர் ஆகிய இடங்களில் போதைப்பொருள் விற்பனையை தடுக்க முற்பட்டபோது நடத்தப்பட்ட தாக்குதலின்போது உயிரிழந்த பர்வீந்தர் சிங் குடும்பத்தினரை திரு அமித் ஷா சந்தித்துப் பேசினார்.

இந்த தாக்குதல் மற்றும் கொலை சம்பவத்திற்கு எதிராக போராட்டம் நடத்தப்பட்டதால் ஒருவார காலத்திற்கு பிறகும் பர்வீந்தர் சிங் உடலுக்கு இறுதிச்சடங்குகள் செய்யப்படவில்லை.

முன்னாள் ராணுவத்தினரான அவரது தந்தை பீம் சிங் தங்கள் மகன் உயிரிழப்புக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

குர்தாஸ்பூரை அடுத்த பட்டாலாவில் போதைப்பொருள் விற்பனைக்கு எதிராக போராடியதால் கொல்லப்பட்ட விக்ரம்ஜித் சிங் குடும்பத்தினரையும் திரு அமித் ஷா சந்தித்து ஆறுதல் கூறினார்.

சங்ரூரில் போதைப்பொருளுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால், தற்கொலை செய்துகொண்ட திரு **Gulzar Singh**-ன் குடும்பத்தினரையும் அவர் சந்தித்து ஆறுதல் கூறினார்.

திரு அமித் ஷா, தங்களை சந்தித்து ஆறுதல் கூறியது மனநிறைவை அளிப்பதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>>

இந்தியா — ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையிலான பொருளாதார உறவுகள் உலகளாவிய நெருக்கடிகளையும் கடந்து புதிய உச்சத்தை எட்டியிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

மும்பை வந்துள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துணைப்பிரதமர் திரு ஷேக் அப்துல்லா பின் சையித்தை சந்தித்து பேசிய டாக்டர் ஜெய்சங்கர், இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் 100 பில்லியன் டாலர்களையும் கடந்துள்ளதாக தெரிவித்தார்.

இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பிறகு, இருதரப்பு வர்த்தகம் புதிய உச்சத்தை எட்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இருதரப்பு முதலீடுகளும் கணிசமாக அதிகரித்திருப்பது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு, எரிசக்தி தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் இணைந்து இந்தியா ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான மக்கள் தொடர்பும் விரிவடைந்திருப்பதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

விமானங்களின் பாதுகாப்பை, விமான போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் சிறப்பாக மேற்கொண்டு வருவதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நடைபெற்ற **Air Traffic Control** தின விழாவில், புதுதில்லியிலிருந்து காணொலி வாயிலாக பங்கேற்று பேசிய திரு ராம்மோகன் நாயுடு, **28** ஆயிரம் சதுர கடல்மைல்

பரப்பளவை இந்திய விமான போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் கையாண்டு வருவதாக தெரிவித்தார்.

ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான விமானங்கள் இந்த பரந்த வான்வெளியில் பயணிப்பதாகவும், அவற்றின் பாதுகாப்பு மற்றும் இயக்கங்களை கண்காணித்து விமானங்கள் ஒழுங்காகவும், விரைவாகவும் தாமதமின்றியும் பயணிப்பதற்கு இந்த அமைப்பு பெரும் பங்காற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் விமான போக்குவரத்தை மேம்படுத்தவும், புதிய விமான நிலையங்களை அமைக்கவும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு தரமான பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>>

சவுதி அரேபியாவுக்கு கூடுதல் வான் பாதுகாப்பு வழங்கப்படும் என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிப்பை வெளியிட்ட பிரிட்டன் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Wes Streeting,** சவுதி அரேபியா ஆதரவு

அளித்துவரும் ஏமன் நாட்டின் மீது **Houthi** படையினர் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், இந்த பாதுகாப்பு அளிக்கப்படுவதாக தெரிவித்தார்.

சவுதி அரேபியாவில் உள்ள நகரங்கள், பொதுமக்கள் மற்றும் முக்கிய கட்டமைப்புகள் மீது ஈரான் நாட்டின் ஆதரவு பெற்ற ஹவுத்தி படையினர் ஏவுகணை தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக அவர் கூறினார்.

சவுதி அரேபியாவின் வான்வெளியை முற்றிலுமாக கண்காணிக்க பிரிட்டன் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சவுதி அரேபியாவுக்கு உதவுவதற்காக ராணுவ அதிகாரிகள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் திரு **Wes Streeting** தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஏமன் நாட்டின் ராணுவ முகாம் மீது ஹவுதிப்படையினர் நேற்று நடத்திய தாக்குதலில் உயிழந்தோர் எண்ணிக்கை **60**-ஆக உயர்ந்துள்ளது.

தெற்கு ஏமன் பகுதியில் உள்ள **Shabwa**-வில் அமைக்கப்பட்டிருந்த ராணுவ முகாம் மீது நீண்டதூரம் சென்று தாக்கக் கூடிய ஏவுகணை மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்நாட்டில் உள்ள கச்சா எண்ணெய், எரிவாயு உற்பத்தி மையங்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக ஏமன் அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள் -1*

பிரெஞ்ச் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-12, 21-12** என்ற செட் கணக்கில், சக நாட்டு வீரரான **Isharani Baruah**-ஐ வென்றார்.

------------------

ராய்ப்பூரில் நடைபெற்றுவரும் ஜிம்பாப்வே அணிக்கு எதிரான மூன்றாவது மகளிர் ட்வெண்டி - ட்வெண்டி கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

---------------

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் இந்திய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இன்றும் பல பிரிவுகளில் பதக்கங்களை வென்றுள்ளனர்.

மகளிர் **200** மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் சிம்ரன் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

ஜப்பானின் **Aichi — Nagoya**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் அவர், **24** புள்ளி எட்டு விநாடிகளில் புதிய சாதனையை படைத்துள்ளார்.

இதேபிரிவில், **Tejalben Damor** வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

மகளிர் **400** மீட்டர் ஓட்டத்தில் **Deepthi Jeevanji** தங்கம் வென்றுள்ளார்.

**56** புள்ளி மூன்று ஆறு விநாடிகளில் அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

ஆடவர் வட்டு எறிதலில் இந்தியாவின் **Pranav Soorma** தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இதில் ராம் ரத்தன் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

ஆடவர் **65** கிலோ வலுதூக்கும் பிரிவில் **Ashok** வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

ஈட்டி எறிதலில் **Prateep Kumar** வெள்ளிப்பதக்கமும், **Ayush Verma** வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளனர்.

**10** மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் மனீஷ் நர்வால் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இதேபிரிவில், **Shrishti Arora** வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

**400** மீட்டர் **Free style** நீச்சல் பிரிவில் **Himanshu Nandal** வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளார்.

டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இன்று ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

ஆடவர் டேபிள் டென்னிஸ் பிரிவில் இந்தியாவின் **Jehan Dorab Madan** வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

மகளிர் டேபிள் டென்னிஸ் பிரிவில், **Baby Sahana Ravi, Prachi Pandey, Pavina Patel, Sonalben Patel** ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இதுவரை **9** தங்கம், **11** வெள்ளி, **15** வெண்கலப்பதக்கங்களுடன் மொத்தம் **35** பதக்கங்களை வென்றுள்ளது.

**<<<<<END>>>>>>**